நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தண்ணீர் பற்றாக்குறை: டெல்டா விவசாயிகள் பாதிப்பு**

First Published : 03 Sep 2011 01:24:26 AM IST

கடலூர், செப். 2: காவிரி நீர் பற்றாக்குறையால் கடலூர் மாவட்ட டெல்டா விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை உருவாகி இருக்கிறது. இதனால், கல்லணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் 1.50 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி நீரை நம்பி இருக்கின்றன. காவிரி நதி நீர் பிரச்னை காரணமாக, 1 லட்சம் ஏக்கரில் நடைபெற்று வந்த குறுவை விவசாயம் இவ்வாண்டு வெறும் 20 ஆயிரம் ஏக்கராகக் குறைந்து விட்டது.

இந்நிலையில் கடலூர் டெல்டா விவசாயிகளின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்வது சம்பா சாகுபடி மட்டுமே. எனவே இவ்வாண்டு சுமார் 1.45 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முந்தைய ஆண்டுகளில் இல்லா நிகழ்வாக இவ்வாண்டு, ஜூன் 6-ம் தேதி மேட்டூர் அணை பாசனத்துக்குத் திறக்கப்பட்டது. கடலூர் மாவட்ட டெல்டா பாசனத்துக்காக ஜூன் 29-ம் தேதி கொள்ளிடம் கீழணையும், ஆகஸ்ட் 2-ம் தேதி வீராணம் ஏரியும் திறக்கப்பட்டன. தற்போது கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளுக்கு (கடை மடைப் பகுதியான சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனப் பகுதி உள்பட) ஒருசேர தண்ணீர் விடப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு திருப்தியளிக்கிறது.

மேட்டூர் அணையில் இருந்து கல்லணைக்குத் திறக்கப்படும் நீரில் 10 சதவீதம் கடலூர் மாவட்டத்துக்கு வழங்க வேண்டும் என்பது விதி. அந்த வகையில் கடலூர் மாவட்ட விவசாயத்துக்கு 1,000 கன அடி நீர் திறக்கப்பட வேண்டும். ஆனால் 500 கன அடி நீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது.

எனவே வீராணம் ஏரிக்கு கடந்த 10 நாள்களாகவே சென்னை குடிநீர் உள்பட 300 கன அடி நீர் மட்டுமே கிடைத்து வருகிறது. வீராணம் ஏரியின் நீர் மட்டம் வெள்ளிக்கிழமை 44.60 அடியாக இருந்தது. (வீராணத்தில் 43 அடி உயரத்துக்குமே நீர் நிரம்பினால்தான் பாசனத்துக்கு திறக்க முடியும்). தற்போது வீராணம் ஏரியின் 27 மதகுகளில் 13-ல் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

சம்பா பருவத்தில் கடலூர் டெல்டா பாசனப் பகுதிகளில் பிபிடி, சி.ஐஆர். 1009, பொன்னி, ஏடிடி 38, ஏடிடி 43 ஆகிய நெல் ரகங்கள் நடவு செய்கிறார்கள். இதில் 80 சதவீதம் பிபிடி ரகம்

நடப்படுகிறது. டெல்டா பகுதிகளில் தற்போது 10 சதவீதம் சி.ஆர்.1009 ரகம் நாற்றங்கால் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பெரும்பகுதி நடவாகும் பிபிடி ரகம், நாற்றங்கால் பணிகள் வரும் 10-ம் தேதிக்குள் தொடங்கும் என்கிறார்கள் விவசாயிகள்.

இவ்வாண்டு முன்கூட்டியே காவிரி நீர் திறக்கப்பட்டதால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட நம்பிக்கை காரணமாக கடலூர் மாவட்ட டெல்டா பகுதிகளில் ஒரே நேரத்தில் சாகுடிப் பணிகள் நடைபெற உள்ளன. ஆனால் தண்ணீர் பற்றாக்குறை விவசாயிகளை பாதிக்கத் தொடங்கி இருக்கிறது.

இதுகுறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், டெல்டா பாசனப் பகுதிகளில் 80 சதவீதம் பயிரிடப்படும் பிபிடி ரகம் நாற்றங்கால் பணிகளை இன்னும் 10 தினங்களுக்குள் முடித்துவிட வேண்டும். அதற்குக் கூடுதல் தண்ணீர் தேவை. கல்லணையில் இருந்து 2 ஆயிரம் கன அடி வீதம், குறைந்தது 5 நாள்களுக்காவது திறக்க வேண்டும்.

கிடைக்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நிலையில் இருக்கிறோம். நாற்றங்கால்களுக்கு மாலை 4 மணிக்கு தண்ணீர் விடுவதும் காலை 6 மணிக்கு வடிகட்டுவதும் வழக்கம். எனவே இதற்காக பாசன வாய்க்கால்களை இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை மூடிவிட வேண்டும். அனைத்து வாய்க்கால்களுக்கும் லஸ்கர்கள் உள்ளனர். அவர்களைக் கொண்டு மேற்கண்டவாறு நீர் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

கொள்ளிடம் கீழணை விவசாயிகள் சங்கச் செயலாளர் விநாயகமூர்த்தி கூறுகையில், வடக்குராஜன் வாய்க்கால் பாசனப் பகுதிகளில் (27,300 ஏக்கர்) 10 சதவீதம் சிஐஆர். 1009 நெல் நாற்றங்கால் பணி முடிந்து, இன்னும் ஒரு வாரத்தில் நடவுப் பணிகளை தொடங்க இருக்கிறார்கள். வரும் 10 தினங்களுக்குள் பிபிடி ரகம் நாற்றங்கால் பணிகளை தொடங்கினால்தான், தை முதல் வாரத்தில் அறுவடைக்கு தயாராகும்.

ஆனால் வடக்கு ராஜன் வாய்க்காலில் வாரம் இரு முறைதான் தண்ணீர் விடுகிறார்கள். இடையார், வாண்டையாரிருப்பு, திருவநாரையூர் பகுதிகளில் நாறங்கால்கள் தண்ணீரின்றி காய்கின்றன. கொணவாசல், பூந்தாழமேடு, எய்யலூர் பகுதி வயல்களில் தண்ணீர் நனையவே இல்லை. உரிய காலத்தில் நடவுப் பணிகள் தொடங்க வேண்டுமானால், வடக்குராஜன் வாய்க்காலில் 350 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளை கேட்டதற்கு கல்லணையில் இருந்து கூடுதல் தண்ணீர் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

தினமலர்

**சாதகமான பருவ நிலையால், நடப்பு ஆண்டில்சர்வதேச ரப்பர் உற்பத்தி 5சதவீதம் அதிகரிக்கும்**

செப்டம்பர் 03,2011,03:14



கொச்சி:சர்வதேச அளவில், ரப்பர் பயன்பாடு அதிகரித்து, அந்த அளவிற்கு உற்பத்தி இல்லாததால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, சர்வதேச சந்தையில், இயற்கை ரப்பரின் விலை மிகவும் அதிகரித்திருந்தது. இந்நிலையில், நடப்பாண்டில், இயற்கை ரப்பர், அதிகளவில் உற்பத்தியாகும் பல நாடுகளில், இதன் உற்பத்தி நன்கு இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இவ்வாண்டு, இதன் விலை, உயர வாய்ப்பில்லை என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தேக்க நிலையால், மோட்டார் வாகனத் துறையில், கார் விற்பனை குறைந்து போயுள்ளது. எனவே, தேவைக்கும் அதிகமாக ரப்பர் அளிப்பு இருக்கும் என்ற மதிப்பீடும் உள்ளது.இந்நிலையில், நடப்பு 2011-12ம் நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில், சர்வதேச அளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 29 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதியாண்டின் இதே காலத்தில், 21 லட்சம் டன் என்றளவில் இருந்தது.

இயற்கை ரப்பர் உற்பத்தி, நாடுகளின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், நடப்பு காலண்டர் ஆண்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.அதாவது,நடப்பு காலண்டர் ஆண்டில், சர்வ தேசஅளவில் இயற்கை ரப்பர்

உற்பத்தி, 5சதவீதம் உயர்ந்து 99.60 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப் பிடப் பட்டுள்ளது.

நடப்பாண்டு தாய்லாந்தில், அதிக அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந் நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 33 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தோனேஷி யாவின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 29 லட்சம் டன்னாகவும், மலேசியாவின் உற்பத்தி, 9 லட்சத்து, 75 ஆயிரம் டன் என்ற அளவிலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேசஅளவில், இயற்கை ரப்பர் உற்பத்தியில், இந்தியா நான்காமிடத்தில் உள்ளது. நம் நாட்டில், நடப்பாண்டு இயற்கை ரப்பர் உற்பத்தி, 9 லட்சத்து 1,000 டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.சென்ற ஏப்ரல் மாதம்,சர்வதேசஅளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 6 லட்சத்து, 28 ஆயிரம் டன்னாக இருந்தது.

இது, மே மாதம், 7 லட்சத்து, 18 ஆயிரம் டன்னாக உயர்ந்தது. தற்காலிக மதிப்பீட்டின்படி, சென்ற ஜூன் மாதம் சர்வதேச இயற்கை ரப்பர் உற்பத்தி, கடந்தாண்டின் இதே மாதத்தை விட, 5.3சதவீதம் அதிகரித்து, 8 லட்சத்து, 42 ஆயிரம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின், ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான இரண்டாவது காலண்டில், உலக நாடுகளின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 27 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற நிதியாண்டின், இதே காலத்தை விட, 3.3சதவீதம் அதிகமாகும்.தற்போதைய மதிப்பீட்டின்படி, சென்ற ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில்,சர்வதேசஅளவில் இயற்கை ரப்பர் உற்பத்தி, முறையே, 9 லட்சத்து, 19 ஆயிரம் டன் மற்றும் 9 லட்சத்து, 89 ஆயிரம் டன் என்ற அளவில் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நடப்பு செப்டம்பர் மாதம், இயற்கை ரப்பர் உற்பத்தி, 9 லட்சத்து, 89 ஆயிரம் டன்னாக இருக்கும் என்று எதிர் பார்க் கப்படுகிறது. அக்டோபரில், இதன் உற்பத்தி, 3.8சதவீதம் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

பருவ நிலைசாதகமாக உள்ளதால், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், இயற்கை ரப்பர் உற்பத்தி, அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச சந்தையில், போதிய அளவிற்கு, இயற்கை ரப்பர் அளிப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், விலைஉயராது என்று தெரிகிறது.

**நறுமண பொருட்கள் ஏற்றுமதி 22% ஆக அதிகரிப்பு**

செப்டம்பர் 03,2011,11:06



கொச்சி : இந்திய ரூபாயின் மதிப்பில் ஏற்றம் காணப்பட்டதால் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான மாதத்தில் நறுமண பொருட்களின் ஏற்றுமதி 22 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த காலகட்டத்தில் ரூ.2,613.50 கோடி மதிப்பிலான 157,725 டன் நறுமண பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ஆனால் அளவுகளின் அடிப்படையில் பார்த்தால் நறுமண பொருட்களின் ஏற்றுமதி 24 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் ரூ.2135 கோடி மதிப்பிலான 208,775 டன் நறுமண பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மிளகு, சிறிய ஏலக்காய், பெரிய ஏலக்காய், இஞ்சி, மஞ்சள், புளி உள்ளிட்ட மசாலா பொருட்களின் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு ஆகிய இரண்டிலும் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 7550 டன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**கொப்பரையை உலர வைப்பதற்கு சோலார் உலர்களம்**

செப்டம்பர் 03,2011,16:18



பொள்ளாச்சி: பொள்ளாச்சி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி சார்பில் தென்னை விவசாயிகளுக்காக சோலார் உலர்களம் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் முன்னோடியாக

அமைக்கப்பட்டுள்ள சோலார் உலர்களம் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக உள்ளது.

பொள்ளாச்சி, ஆனைமலை, நெகமம், கிணத்துக்கடவு, உடுமலை சுற்றுப்பகுதியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கொப்பரை உலர்களங்கள் உள்ளன. ஆனால், மழைகாலத்தில் கொப்பரை உற்பத்திக்கு விடுப்பு கொடுப்பதால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் வேலை இழக்கின்றனர். எனவே, ஆண்டு முழுவதும் கொப்பரை உற்பத்தி செய்யும் சோலார் உலர்களத்தை பொள்ளாச்சி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி (பிசிஎம்எஸ்) நிர்வாகம் அமைத்துள்ளது. லேசான வெயில் இருந்தாலே கொப்பரை உற்பத்தி செய்வதற்கு தேவையான வெப்பம் கிடைப்பதால், மழை காலத்திலும் தடையின்றி கொப்பரை தயாரிக்கப்படுகிறது.

பொள்ளாச்சி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி தனி அலுவலர் ராதாகிருஷ்ணன், விற்பனை அபிவிருத்தியாளர் தங்கவேல் கூறியதாவது: பொள்ளாச்சியில் மழைப்பொழிவு மாதக்கணக்கில் நீடிப்பதால் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, 'பிசிஎம்எஸ்' வளாகத்தில் 750 சதுர அடியில் சோலார் உலர்களம் 9 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சோலார் குடில் 'பாலி எத்திலின்' எனப்படும் 200 மைக்ரான் பிளாஸ்டிக் கவர் கொண்டு போர்த்தப்பட்டுள்ளது. வெளிக்காற்று உள்ளே புகாதவாறு இருக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. லேசான வெயில் இருந்தாலே சோலார் உலர்களத்தினுள் வெப்பம் அதிகமாக இருக்கும். சராசரியாக 60 -80 டிகிரி செல்சியஸ் வரையிலும் வெப்பம் இருக்கும்.

இந்த உலர்களத்தில் ஒரே நேரத்தில் 10,000 தேங்காய்களை உடைத்து உலர வைத்து கொப்பரை உற்பத்தி செய்ய மூன்றடுக்கு ரேக் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்கள் சிரட்டையுடன் தேங்காய் உலர வைக்க வேண்டும். பின், சிரட்டையை அகற்றி விட்டு, கொப்பரையை உலர வைத்தால் கொப்பரையின் ஈரப்பதம் 6 சதவீதத்திற்கு வந்து விடும். நான்கு நாட்களில் கொப்பரை தயாரிக்கும் பணி முடிந்து விடுகிறது. இயற்கை முறையில் சுத்தமான கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது.

சோலார் உலர்களத்தில் செயற்கையாக,'பயோ மாஸ்' முறையில் தென்னை மட்டை, விறகுகளை பயன்படுத்தி வெப்பம் ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சோலார் உலர்களத்தில் கொப்பரை உற்பத்தி செய்ய விவசாயிகளிடம் ஒரு கிலோவுக்கு 40 பைசா கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த தொகை பராமரிப்பு செலவு, கொப்பரை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

**நெல் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைத்தால் அதிக விளைச்சல்: அதிகாரி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,00:51 IST

மோகனூர்: "சம்பா பருவத்துக்கு நாற்று விடும் பணி துவங்கப்பட்டுள்ள நிலையில், நெல் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைத்தால், அதிக விளைச்சல் பெறலாம்' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில், சம்பா பருவத்துக்கான நெல் நாற்றுவிடும் பணி துவங்கி உள்ளது. நாற்று விடுவதற்கு முன், விதையுடன் ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் பூஞ்சாண கொல்லியை கலந்து, விதை நேர்த்தி செய்வதால், விதை மூலம் பரவக்கூடிய நோய்கள் மற்றும் குலை நோய், இலைக்கருகல் நோய் ஆகியவற்றை தடுக்கலாம். மேலும், ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் விதையுடன், இரண்டு பொட்டலம் (400 கிராம்) அசோஸ்பைரில்லம் (நெல்) மற்றும் இரண்டு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தை விதையுடன் நன்கு கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். அசோஸ்பைரில்லம் காற்றில் இருக்கும் தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கிறது. பாஸ்போ பாக்டீரியா மண்ணில் கிட்டாத நிலையில் உள்ள மணிச்சத்தை கரைத்து நெல் பயிருக்கு தருகிறது. அதனால், உரச்செலவு குறைவதுடன் அதிக விளைச்சலும் கிடைக்கும். உயிர் உரங்கள், மோகனூர் விரிவாக்க மையத்தில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**செண்டுமல்லி சாகுபடி பரப்பு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,23:40 IST

கிருஷ்ணகிரி: செண்டு மல்லி பூவுக்கு வரவேற்ப்பு உள்ள நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குட்டை ரக செண்டு மல்லி பயிரிடும் பரப்பு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் சீதோஷ்ணநிலை காரணமாக ஓசூர் பகுதியில் ரோஜா மற்றும் காவேரிப்பட்டணம் பகுதியில் குண்டுமல்லி ஆகியவை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர் பகுதியில் சாகுபடி செய்யப்படும் ரோஜா மலர்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. காவேரிப்பட்டணம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் குண்டுமல்லி பெங்களூருக்கு கொண்டு செல்லப்பட்டு வடமாநிலங்கள் மட்டுமன்றி வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் வேப்பனப்பள்ளி, பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, தட்டக்கல், காவேரிப்பட்டணம் ஆகிய பகுதியில் அதிக அளவில் நெட்டை ரக செண்டுமல்லியை விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். இங்கு அறுவடை செய்யப்படும் பூக்கள் வெளி மாவட்டங்களுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ரக செடிகள் சுமார் மூன்று அடி வளர்ந்த பின்பு தான் பூக்கள் பூக்கும். நெட்டை ரகத்தில் இருந்து அதிக அளவில் ஆண் பூக்கள் பூப்பதால் பாதியளவுக்கு பூக்கள் வீணாகிவிடும். இதனால் விவசாயிகளுக்கு குறைந்த அளவே லாபம் கிடைத்து வந்தது.

கடந்த 2008 ம் ஆண்டு தோட்டக்கலை துறையினர் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு குட்டை ரக செண்டுமல்லி செடியை அறிமுகப்படுத்தினர். இந்த ரக செடிகள் நட்டு ஒரு அடி உயரம் வளர்ந்தவுடன் பூக்கள் பூக்க ஆரம்பித்து விடுகிறது. வீரிய ஒட்டு ரகமான இந்த செண்டுமல்லி செடியில் அணைத்தும் பெண் பூக்களாக பூப்பதால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு விளைச்சல் கிடைக்கிறது. மேலும் செடிகள் நட்டு 40 நாட்களில் பூக்கள் அறுவடைக்கு வந்துவிடுகிறது. ஐந்து நாட்களுக்கு ஒரு முறை பூக்கள் அறுவடை செய்யும் நிலையில் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைத்து வருகிறது.

இதன் காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குட்டை ரக செண்டுமல்லி சாகுபடி பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு மாவட்டம் முழுவதும் சுமார் 2,500 ஏக்கரில் குட்டை ரக செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டது இந்த ஆண்டு சுமார் 3,200 ஏக்கராக அதிகரித்துள்ளது.

**பவானிசாகருக்கு 12,000 கன அடி வரத்து**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,00:46 IST

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணைக்கு நேற்று 12 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது. பவானிசாகர் அணையில் இருந்து ஆகஸ்ட் 15ம் தேதி, கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்மட்டம் சரிந்து வந்தது. நான்கு நாட்களாக நீலகிரியில் நல்ல மழை பெய்கிறது. தண்ணீர் வரத்து உயர்ந்தது. நேற்று முன்தினம் 7,287 கன அடி தண்ணீர் வந்தது. நேற்று காலை 12 ஆயிரத்து 444 கன அடி தண்ணீர் வரத்தானது. இதன்மூலம், அணை நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்து, 83.65 அடியாக இருந்தது. ஆற்றில் 700 கன அடியும், வாய்க்காலில் 2,300 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டது.

18,300 டன் உரம் ஈரோட்டில் இருப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,00:46 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் தற்போது 18 ஆயிரத்து 300 டன் உரம் இருப்பில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் ஆகஸ்ட் 15ம் தேதி கீழ் பவானி பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் மூலம் 39 ஆயிரத்து 420 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது, நாற்றங்கால் தயாரிப்பு பணி நடந்து வருகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயப்பணி அதிக அளவில் நடக்கிறது. தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்களில் தற்போது, யூரியா 8,000 டன், டி.ஏ.பி., 3,800 டன், காம்ப்ளக்ஸ் 6,000 டன், பொட்டாஷ் 500 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் நடவுப்பணி துவங்கும்போது, மேலும் தேவையான அளவு பொட்டாஷ் உரம் விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான அளவு உரம் செப்டம்பர் 10ம் தேதிக்குள் வந்து சேரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. ""உரக்கடைகளில் விவசாயிகள் உரங்களை வாங்கும்போது, உரிய ரசீது பெற வேண்டும். உர மூடையில் குறிப்பிட்டுள்ள விலைக்கு கூடுதலாக, விலை கொடுக்கக்கூடாது. அவ்வாறு எவரேனும் கூடுதல் தொகை கேட்டால், அருகில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனரிடம் புகார் தெரிவிக்கலாம். அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்,'' என, வேளாண் இணை இயக்குனர் அக்பர் எச்சரித்துள்ளார்.

**ஈரோட்டில் ரூ. 4,000க்கு கீழிறங்கியது மஞ்சள் விலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,00:45 IST

ஈரோடு: பண்டிகை காலங்களை எதிர்பார்த்து கிடக்கும் மஞ்சள் விவசாயிகளுக்கு, இரண்டு நாள் விடுமுறைக்கு பின், மஞ்சள் விலை 4,000 ரூபாய்க்கு கீழ் இறங்கியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நடப்பாண்டு தேவைக்கு அதிகமாக மஞ்சள் தேக்கம் அடைந்ததால், விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. கடந்த 18ம் தேதி லாரி வேலைநிறுத்தம் காரணமாக, ஒரு வாரம் மஞ்சள் மண்டிகளில் ஏலம் நடக்கவில்லை. அடுத்து ஒரு நாள் மட்டுமே சந்தை நடந்தது. பின்னர், வழக்கம் போல் சனி, ஞாயிறு இரண்டு நாள் விடுமுறை அளிக்கப்பட்டது, விடுமுறைக்கு பின், 29ம் தேதி சந்தை கூடியது. விரளி மஞ்சள் குவிண்டால் 5,299 ரூபாய்க்கும், கிழங்கு 4 1,689 ரூபாய்க்கும் விற்கப்பட்து. அதையடுத்து, 30ம் தேதி மஞ்சள் குவிண்டாலுக்கு 340 ரூபாய் அதிகரித்தது.

மீண்டும் ரம்ஜான், விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு, மஞ்சள் சந்தைகளுக்கு இரண்டு நாள் விடுமுறை அளிக்கப்பட்டது. நேற்று வழக்கம்போல், மஞ்சள் சந்தை நடந்தது. நேற்று

குவிண்டாலுக்கு மேலும் 200 ரூபாய் குறைந்ததால் விவசாயிகள் பெரும் கவலைக்குள்ளாகி உள்ளனர். ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நேற்று முன்தினம் விரலி குவிண்டால் 5,639 ரூபாய்க்கு விற்றது; நேற்று 5,440 ரூபாயாக சரிந்தது. கிழங்கு 4,629க்கு விற்றது; 40 ரூபாய் அதிகரித்து 4,669 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஈரோடு சொசைட்டியில் விரலி 100 ரூபாய் குறைந்து, 4,491 ரூபாய்க்கும், கிழங்கு 210 ரூபாய் குறைந்து, 4,098 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெளிமார்க்கெட்டில் விரலி, 4,506 ரூபாய்க்கும், கிழங்கு 4,234 ரூபாய்க்கும், கோபி சொசைட்டியில் விரலி 4,106 ரூபாய்க்கும், கிழங்கு 3,911 ரூபாய்க்கும், சேலம் சொசைட்டியில் விரலி 5,466 ரூபாய்க்கும், கிழங்கு 4,674 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

**பருவமழை துணையால் நிரம்பியது ஆழியாறு அணை!**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,23:21 IST

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்யும் தொடர்மழையால், ஆழியாறு அணையின் முழு கொள்ளளவும் நிரம்பியுள்ளது. வால்பாறை, சோலையாறு உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்ததால் சோலையாறு, பரம்பிக்குளம் அணைகளின் முழு கொள்ளளவும் நிரம்பியுள்ளது.

இந்நிலையில், தொடர்ந்து மழை பெய்வதால், அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அணைகளில் இருந்து உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது.

சோலையாறு அணையில் 164.16 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 4,500 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 4,761 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 71.93 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 8,004 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. அணையில் இருந்து தூணக்கடவு டனல் வழியாக 1,050 கனஅடி தண்ணீரும், அணையின் ஸ்பில்வே மதகுகள் வழியாக 6,940 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகின்றன.

ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 119.20 அடி நீர்மட்டம் உள்ளது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து வினாடிக்கு 598 கனஅடி தண்ணீரும், ஆழியாறு பீடர் கால்வாய் வழியாக 84 கனஅடி தண்ணீரும், மேல் ஆழியாறில் இருந்து 579 கனஅடி தண்ணீரும் வரத்தாக உள்ளது. ஆழியாறு அணையில் 650 ஏக்கர் பரப்பில் 3,864 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்க

முடியும். நேற்று காலை நிலவரப்படி அணையில் 3,808 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 53.79 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 645 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. அணையிலிருந்து பாசனத்திற்கு வினாடிக்கு 325 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 60.27 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1,641 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 856 கனஅடி தண்ணீர் வெளியேறுகிறது.

நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு நிலவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு: சோலையாறு- 121, பரம்பிக்குளம்- 61, ஆழியாறு- 13.2, திருமூர்த்தி - 16.5, அமராவதி- 14, மேல்நீராறு- 183, கீழ்நீராறு- 89, வால்பாறை- 144, சர்க்கார்பதி- 20, மணக்கடவு- 15.2, பொள்ளாச்சி- 13, மேல் ஆழியாறு- 15. காடம்பாறை- 8, தூணக்கடவு- 42, பெருவாரிப்பள்ளம்- 36, வேட்டைக்காரன் புதூர்- 19, பொங்கலூர்- 7, நவமலை- 11.5 என்ற அளவில் மழை பெய்தது.

வெள்ள அபாயம்!

ஆழியாறு அணையில் 119.20 அடி நீர்மட்டம் உள்ளதால், முழு கொள்ளளவும் நிரம்பும் நிலையில் உள்ளது. பி.ஏ.பி., அதிகாரிகள் கூறுகையில், "ஆழியாறு நீரப்பிடிப்பு பகுதியில் மழை பெய்வதால், நீர்வரத்து அதிகமாக உள்ளது. இந்நிலையில், காடம்பாறை அணையில் இருந்து ஆழியாறுக்கு தண்ணீர் வெளியேற்றப்பட்டால், ஆழியாறு அணை நிரம்பி வழிந்து விடும். அணைக்கு நீர்வரத்து அதிகமாக உள்ளதால், எப்போது வேண்டுமானாலும் நிரம்பி வழியும்.

இதனால், ஆழியாறு அணையை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். அணை நிரம்பும் போது, ஆழியாறு ஆற்றில் தண்ணீர் திறக்க நேரிடும் என்பதால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கேரளா மாநிலம் மூலத்தரா அணைக்கும் வெள்ள அபாயம் விடுக்கப்பட்டுள்ளது. ஆழியாறு ஆற்று வழியோர கிராமங்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்க வருவாய்த்துறைக்கு பரிந்துரை செய்துள்ளோம்,' என்றனர்.

**மழை தொடர்வதால் காய்கறி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,23:26 IST

மஞ்சூர் : தொடர்ந்து பெய்து வரும் மழையால் பயிரிடப்பட்டுள்ள மலை காய்கறிகள் அழுகும் நிலை ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான எமரால்டு, இத்தலார், போர்த்தி, பெம்பட்டி, பேலிதளா, மணிஹட்டி, மீக்கேரி, பாலகொலா, கல்லக்கொரை, நுந்தளா, தாம்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் மலை காய்கறிகளான உருளை கிழங்கு, முட்டை கோஸ், பீட்ரூட், காரட், முள்ளங்கி, பீன்ஸ் உள்ளிட்டவைகள் விளைவிக்கப்படுகின்றன. கடந்த 2 மாதங்களாக பரவலாக நல்ல மழை பெய்து வருவதுடன் சில நேரங்களில் கன மழையும் பெய்து வருகிறது. கன மழைக்கு தாழ்வான பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மலை காய்கறி தோட்டங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால், பயிரிடப்பட்டுள்ள மலை காய்கறிகள் மழைக்கு அழுகியும், கன மழைக்கு அடித்து செல்லப்பட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இது குறித்து மணிஹட்டி பகுதி விவசாயி லிங்கன் கூறுகையில்,""மலை காய்கறி தோட்டங்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி பயிர்கள் அழுகும் நிலையில் காணப்படுகிறது. மலை காய்கறி பயிர், மருந்து தெளிப்பான்களுக்கு அதிகம் விலை உள்ள சூழ்நிலையில் மலை காய்கறி விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. இதே நிலை தொடர்ந்தால் பெரும் நஷ்டம் ஏற்படும்," என்றார்.

**தேனி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி செய்ய முயற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,00:12 IST

தேனி : தேனி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி செய்ய தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி இல்லாமல் இருந்தது. சோதனை முறையில் ஒரு சிலர் மட்டும் சாகுபடி செய்தனர். தற்போது நவீன தொழில்நுட்பங்கள் வந்துள்ள நிலையில் மஞ்சள் சாகுபடிக்கு அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.சித்தார்பட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, டி.சுப்புலாபுரம், பெரியகுளம், லட்சுமிபுரம் பகுதியில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**தெற்கு வள்ளியூரில் விதை கிராம பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,02:38 IST

திருநெல்வேலி:வள்ளியூர் வட்டாரம் தெற்கு வள்ளியூர் கிராமத்தில் விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி நடந்தது.பயிற்சிக்கு நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் தலைமை வகித்தார். வள்ளியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மேரி அமிர்தபாய் வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குநர் (மத்திய திட்டம்) குமாரசாமி, வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்) பாலசுப்பிரமணியன் நெல்விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து சிறப்புரையாற்றினர்.வள்ளியூர் வட்டார வேளாண்மை அலுவலர் சுஜாதாபாய் நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவராஜன், குருபாக்கியம், ராமநாதன் செய்திருந்தனர்.

**மானிய விலையில் விதைகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,02:38 IST

திருநெல்வேலி:சேரன்மகாதேவி, வீரவநல்லூர் வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன.சேரன்மகாதேவி, வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் 2011-12ம் ஆண்டு விதை கிராம திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வம்பன்3 உளுந்து சான்று விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கரிசல்பட்டி, சொக்கலிங்கபுரம், தெற்கு வீரவநல்லூர்1 மற்றும் தெற்கு வீரவநல்லூர்2 வருவாய் திட்டத்திற்கு உட்பட்ட விவசாயிகள் வரும் பருவமழையை கருத்தில் கொண்டு இவ்விதைகளை வாங்கி பயனடையுமாறு சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பிசான பருவ சாகுபடிக்கு இயற்கை உரம் அடிக்கும் பணி துவக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2011,23:30 IST

ஆறுமுகநேரி : ஆறுமுகநேரி சுற்றுப் பகுதியில் பிசான பருவ சாகுபடிக்காக விவசாயிகள் வயல்களில் இய ற்கை உரம் அடிக்கும் பணியினை துவக்கி உள்ளனர். ஆறுமுகநேரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில் இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். நல்லூர் கீழகுளம், நல்லூர் மேலகுளம், ஆறுமுகநேரி பொய்யான்குளம் ஆகிய பாசன குளங்கள் உள்ளது. இந்த பாசன குளங்களின் மூலம் வயல்களுக்கு

பாசன வசதி கிடைத்து வருகிறது. இக்குளங்கள் தாமிரபரணி ஆற்றின் கடைமடையில் உள்ளதால் ஆண்டுதோறும் ஒரு போக விவசாயம் மட்டுமே நடந்து வருகிறது.

இந்த ஆண்டிற்கான பிசான பருவம் மழை காலம் துவங்கியவுடன் தீவிரமாக நடக்கும். இதற்காக வயல்களை சீரமைக்கும் பணி தற்போதே துவக்கி உள்ளனர். வயல்களை சீரமைத்து இயற்கை உரம் போடும் பணிகள் நடந்து வருகிறது. வீடுகளிலும், தோட்டங்களிலும் சேமித்து வைக்கப்படும் இய ற்கை உரங்களை வயல்களுக்கு கொண்டு செல்லும் பணியிø ன மேற்கொண்டு வருகின்றனர். கடந்த காலங்களில் மாட்டு வண்டி அதிக எண்ணிக்கையில் இருந்தது. இதனால் உரங்களை மாட்டு வண்டி மூலம் வயல்களுக்கு அடித்து வந்தனர். தற்போது மாட்டு வண்டி இல்லாததால் டிராக்டர் மூலம் உரம் அடித்து வருகின்றனர். ஒரு டிராக்டர் உரம் ரூ.900 க்கு விற்பனையும் நடந்து வருகிறது. ஒரு ஏக்கர் வயலுக்கு 2 டிராக்டர் உரம் தேவைப்படுகிறது. வீடுகளில் உரம் இல்லாதவர்கள் விø லக்கு பணம் கொடுத்து உரம் வாங்கி வயல்களுக்கு கொண்டு சேர்க்கின்றனர். மழை துவங்குவதற்கு முன்பு இப்பணியை முடித்து விட வேண்டும் என்பதால் விவசாயிகள் மும்முரமாக உரம் போடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.